**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, அரக்கோணம்**

**முன்னிலை**: திரு.மு.கோகுல் மிதுன் குமார், எம்.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1 (FAC),

அரக்கோணம்.

2026ம் ஆண்டு ஜூலை 28ம் நாள் செவ்வாய்கிழமை

**Crl.M.P.No.220/2026**

**in**

**M.C.No.5/2018**

**(CNR.NO.TNRP09-000414-2026)**

1. சுஜாதா (எ) மேனகா,
க/பெ. முத்து கிருஷ்ணன்.

2. ஷீரா,
த/பெ. முத்து கிருஷ்ணன்.
(2வது மனுதாரரின் தாயார், காப்பாளர் 1வது மனுதாரர் சுஜாதா)
மனுதாரர்களின் முகவரி:
எண்.143/A, 3வது குறுக்குத் தெரு,
புளியமங்லம் காலனி கிராமம் மற்றும் அஞ்சல்,
அரக்கோணம் தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம். ... மனுதாரர்கள்

//எதிர்//

முத்து கிருஷ்ணன்,
த/பெ. செல்லன்,
எண். 143, புதிய தெரு,
புளியமங்லம் காலனி கிராமம் மற்றும் அஞ்சல்,
அரக்கோணம் தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம். ... எதிர்மனுதாரர்

இந்த மனு 14.07.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.G.பாபு அவர்கள் ஆஜராகி, எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் 22.06.2026ம் தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டு, 28.07.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டு, வழக்காவணங்கள் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

ஜீவனாம்ச நிலுவை தொகையான ரூ.6,35,000/−த்தை வசூல் செய்ய எதிர்மனுதாரரின் சம்பளத்தில் பிடித்தம் செய்ய உத்தரவிடக் கோரி கு.வி.மு.ச. பிரிவு 128 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனு சுருக்கம் :</u>**

(i) மனுதாரர்களுக்கு எம்.சி.05/2018 வழக்கில் மாதம் தலா ரூ.3000/− ஜீவனாம்சமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. பின்னர் Crl.M.P.No.971/2023 ன் மூலம் மனுதாரர்களுக்கு மாதம் தலா ரூ.6,000/− ஜீவனாம்சமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதுநாள் வரை எதிர்மனுதாரர் ஜீவனாம்ச தொகையை கொடுக்கவில்லை. எதிர்மனதாரர் உத்தரவுகளை நிறைவேற்றவில்லை. எதிர்மனுதாரர் தென்னக இரயில்வேயில் கிரேடு ஒன் பெயின்டராக வேலை செய்து கொண்டு மாதம் ரூ. 60,000/− வருமானம் ஈட்டி வருகிறார்.

(ii) 2வது மனுதாரர் தனியார் பள்ளியல் படித்து வருகிறார். பள்ளி கட்டணமாக எதிர்மனுதாரர் ஒரு ரூபாய் கூடி செலுத்தவில்லை. 1வது மனுதாரர் கடன் பட்டு கஷ்டப்பட்டு 2வது மனுதாரரை படிக்கவைத்து

வருகிறார். மனுதாரர்கள் உணவு மற்றும் அடிப்படைத் தேவைகளுக்கு கஷ்டப்பட்டு வருகிறார்கள். எனவே மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவக்கப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரருக்கு போதுமான கால அவகாசம் வழங்கியும் நீதிமன்றத்தில் ஆஜராகததால், 22.06.2026 தேதியிட்ட உத்தரவின் மூலம் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

4. மனுவில் தீர்விற்குரிய பிரச்சனை மனு அனுமதிக்கப்படக்கூடியதா?

5. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி M.C.No.05/2018 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து 11.09.2020 தேதியிட்ட உத்தரவின் மூலம் மனுதாரர்களுக்கு மாதம் தலா ரூ.3000/- ஜீவனாம்சமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. பின்னர் Crl.M.P.No.971/2023 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து 30.01.2026ம் தேதியிட்ட உத்தரவின் மூலம் மனுதாரர்களுக்கு ஜீவனாம்சமாக மாதம் தலா ரூ.6,000/- எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்று ஜீவனாம்ச தொகையை உயர்த்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் பேரில் நிலுவை தொகையை செலுத்தவில்லை என்று மனுதாரர் தரப்பில் தொகையை வசூல் செய்ய இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் வழக்கில் ஆஜராகாததை பார்க்கும்போது, வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற கூடாது என்பதற்காக ஆஜராகவில்லை? என்றே கருத வேண்டியுள்ளது.

7. மனுதாரர்கள், எதிர்மனுதாரரின் சம்பளத்தை பிடித்தம் செய்ய உத்தரவிடக் கோரி, குவிமுச பிரிவு 128–ன் கீழ் மனுத்தாக்கல் செய்வதற்குப் பதிலாக, தவறுதலாக குவிமுச பிரிவு 421–ன் கீழ் மனுத்தாக்கல் செய்திருந்தாலும், சரியான சட்டப் பிரிவைப் பயன்படுத்தி தக்க பரிகாரத்தை வழங்குவது நீதிமன்றத்தின் கடமையாகும். இவ்வகை மனுக்கள் சமூக நீதி வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருப்பதனால், தவறான சட்டப்பிரிவைக் குறிப்பிட்டது மட்டுமே ஒரு மனுவை நிராகரிப்பதற்கு காரணமாக அமையாது. எனவே, குவிமுச பிரிவு 421–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவையே, குவிமுச பிரிவு 128 –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகக் கருதி, உரிய பரிகாரத்தை வழங்குவது நீதிக்கு உகந்ததாகும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. எதிர்மனுதாரர் தென்னக இரயில்வேயில் கிரேடு ஒன் பெயின்டராக வேலை செய்து கொண்டு மாதம் ரூ. 60,000/– வருமானம் ஈட்டி வருவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அம்சங்கள் குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை. எதிர்மனுதாரர் தென்னக இரயில்வேயில் கிரேடு ஒன் பெயின்டராக வேலை செய்து வருவதால், 30.01.2026 தேதியில் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிறைவேற்ற போதுமான வசதியுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது. ஜீவனாம்ச நிலுவை தொகைக்காக சம்பளத்தில் பிடித்தம் செய்வது குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கீழ்கண்ட வழக்கில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது,

**S.Ilayaraja -Vs- Nandhini Devi**

**(Crl.O.P(MD).No.4757 of 2020, Dated:14.08.2023)**

*The Hon'ble High Court of Madras held in para 19 that "This Court has specifically held that when a person, who is ordered to pay maintenance, fails to comply with the order, he can either be arrested for non compliance or his properties both movable and immovable including salary can be attached.*

*20. Considering the above and on applying the legal dictum above referred, this Court has no hesitation to hold that the impugned order for, attachment of salary is very much valid and legal and as such, the same cannot be found fault with. Hence, this Court concludes that the above petition, which is devoid of merits, is liable to be dismissed.*

9. Crl.M.P.No.971/2023 in M.C.No.05/2018 என்ற வழக்கில் மனுதாரர்களுக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும், இந்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு அல்லது தடை உத்தரவு நிலுவையில் இல்லை என்பதாலும், இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிறைவேற்ற வேண்டியது எதிர்மனுதாரரின் பொறுப்பு என்பதாலும், எதிர்மனுதாரர் வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற கூடாது என்பதற்காக ஆஜராகாமல் உள்ளதாலும், எதிர்மனுதாரருக்கு போதுமான வசதியுள்ளதாலும், இந்த மனு அனுமதிக்கப்படக் கூடியது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, மேற்சொன்ன காரணங்களால் Crl.M.P.No.971/2023 in M.C.No.05/2018 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட 30.01.2026ம் தேதியிட்ட உத்தரவின் படி ஜீவனாம்ச நிலுவை தொகையான ரூ.6,35,000/-த்தை

வசூல் செய்யும் பொருட்டு, எதிர்மனுதாரர் முத்து கிருஷ்ணனின் (Employee No.07F00746, Divisional Office (DPO), Personnel Officer, Selam Division, Selam southern Railway) மாத மொத்த சம்பளத்திலிருந்து (Gross Salary) 1/3 சதவீதத்தை நிலுவை தொகை ரூ.6,35,000/-ம் வசூலாகும் வரை மாதாமாதம் பிடித்தம் செய்து, இந்த நீதிமன்றத்தில் வரைவோலையாக (Demand Drafft) வைப்பீடு செய்ய (Divisional Office (DPO), Personnel Officer, Selam Division, Selam southern Railway, Selam-636005) க்கு உத்தரவிட்டு மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க சுருக்கெழுத்து தட்டச்சர் உடனுக்குடன் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜுலை 28ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M GOKUL MITHUN KUMAR

Judicial Magistrate No.I (FAC), Arakkonam.
Digitally signed by M GOKUL MITHUN KUMAR
DN: cn=M GOKUL MITHUN KUMAR, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1 (FAC),
அரக்கோணம்.

1. **<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>** : இல்லை.

M GOKUL MITHUN KUMAR

Judicial Magistrate No.I (FAC), Arakkonam.
Digitally signed by M GOKUL MITHUN KUMAR
DN: cn=M GOKUL MITHUN KUMAR, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1 (FAC),
அரக்கோணம்.